COPY OF DEPOSITION

இரண்டாம் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு.

அசல் வழக்கு எண். 83/2012

முதல் விசாரணை பி.வா.சா.1 நாள் 16.11.2023

2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ம் தேதி வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திரு.அ.செல்வகுமார், பி.இ., பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயன் | ஜாதி | : |
| த/க பெயர் | : | மதம் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | தொழில் | : |
| மாவட்டம் | : | வயது | : |

**<u>பி.வா.சா.1:முதல் விசாரணை</u>:**

நான் இவ்வழக்கில் 11 ம் பிரதிவாதி ஆவேன். எனக்காகவும், 3, 12, 13, 22, 24 முதல் 26 பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாண வாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாண பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்க கோருகிறேன்.

14.01.1952 ம் தேதியில் பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும்,11.02.1952 ம் தேதியில் பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரய பத்திரத்தின் அசல் **பி.வா.சா.ஆ.2** ஆகவும், 21.06.1965 ம் தேதியில் அருணாசல முதலியார் எழுதி வைத்த உயில் சாசனத்தின் அசல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும், 16.11.1966 ம் தேதியிட்ட அருணாசல முதலியார் 22.09.1966 ம் தேதியில் இறந்ததற்கான இறப்பு சான்றிதழின் உண்மை நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும், 07.03.2012 ம் தேதியிட்ட மாரியம்மாள் (எ) முத்தம்மாள் 24.02.2012 ம் தேதியில் இறந்ததற்கான இறப்பு சான்றிதழின் உண்மை நகல்



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

**பி.வா.சா.ஆ.5** ஆகவும், பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட சொத்துவரி இரசீதுகளின் அசல் (எண்ணிக்கை -4) **பி.வா.சா.ஆ.6** ஆகவும், பாப்பாயம்மாள் (எ) கருப்பாயம்மாள் பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி இரசீகளின் அசல் (எண்ணிக்கை-5) **பி.வா.சா.ஆ.7** ஆகவும், குறியீடு செய்கிறேன்.

மேற்படி ஆவணங்களின் பரிசீலணையில் தாவாவை தள்ளுபடி செய்ய கோருகிறேன்.

**கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.**



This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNED020012942012/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com